**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 193 /2021 PW1**

13.02.2025 **வா.சா.1 பவானி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

இளவர் சிவசக்தி எனது மகள் வழி பேரன். 3ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு இடையே எந்த ஒரு விவாகரத்தும் ஆகவில்லை என்றும், இன்று வரை அவர்களது திருமணம் அமுலில் தான் உள்ளது என்றால் சரியல்ல. அவர்களுக்கு இடையே விவாகரத்து ஆனதாக சொல்வது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்த தேதி, மாத, வருடத்தில் அவர்களுக்கிடையே விவாகரத்து ஆனது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் இதுநாள் வரை கணவன் மனைவியாக கதவு எண் 236, பட்டம்மாள் தெரு, கீழ்பென்னாத்துரில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். சீதாராமனுக்கும், சங்கீதாவிற்கும் திருமணம் நடக்கவேயில்லை என்றால் சரியல்ல. ஆவணி மாதம் 27ம் தேதி என் மகளுக்கும் 2ம் பிரதிவாதிக்கும் திருமணம் ஆனாது ஆனால் வருடம் தெரியாது. நான் சொல்வது போல் ஒருபோதும் என் மகளுக்கும், 2ம் பிரதிவாதிக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது மகள் சங்கீதாவை திருமணம் செய்து கொள்ளாமல் (சேர்மானம்) வாழ்க்கை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. இளவர் மேற்சொன்னவாறு சேர்மான வாழ்க்கையின் மூலம் பிறந்தவர் என்றால் சரியல்ல. அதே சேர்மான உறவின் மூலமாகத்தான் என் மகளுக்கு மேலும் ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்து விட்டது என்றால் சரியல்ல. ஆனால் பெண் குழந்தை பிறந்து இறந்தது உண்மைதான். சேர்மானம் மூலம் பிறப்பு என்பதால் என் பேரன் சிவசக்திக்கோ, இறந்து போன என் பேத்திக்கோ சீதாராமனின் சொத்துக்களின் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. சீதாராமன் உயிருடன் இருக்கும் வரை இளவர் சிவசக்திக்காகவோ, இறந்து போன எனது பேத்திக்காகவோ எந்த ஒரு பாகமும் கோர முடியாது என்றால் சரியல்ல. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.